**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2687/ஆ5/2024, நாள்.03.07.2024**

•••••

**பொருள்** பள்ளிக் கல்வி – தாய் தமிழ் நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய சூலை 18-ம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டமை – 2024 – 2025ஆம் ஆண்டிற்கு "தமிழ்நாடு நாள் விழா" கொண்டாடுதல் – 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் நடைபெறும் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

1. 30.10.2021ம் நாளிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்திக்குறிப்பு எண். 988
2. அரசாணை (நிலை) எண். 101, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ1.1) துறை நாள். 30.06.2023
3. வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.355/2024, நாள். 28.06.2024

•••••

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பு எண். 988 நாள். 30.10.2021-ன் படி தாய்த் தமிழ் நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18-ம் நாளினையே "தமிழ்நாடு நாளாக" இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பெற்றது. அவ்வறிவிப்பினை செயல்படுத்துவதற்காக மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் கீழ்காணும் படி நடைபெறவுள்ளது.

**நாள்– 09.07.2024 (செவ்வாய்கிழமை)**
**நேரம் – பிற்பகல் 2.00 மணி**
**இடம் – அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.**

மேற்காணும் போட்டியில் பங்கேற்கும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ. 10,000/- இரண்டாம் பரிசாக ரூ. 7000/- மூன்றாம் பரிசாக ரூ. 5,000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளுக்கான தலைப்புகள்**

| கட்டுரைப் போட்டி | பேச்சுப்போட்டி | |
|---|---|---|
| ஆட்சிமொழித் தமிழ் | 1. | குமரி தந்தை மார்ச்ல் நேசமணி |
| | 2. | தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா |
| | 3. | முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி |

மேற்காணும் போட்டியில் பள்ளிக்கு ஒருவர் என பங்கேற்க வேண்டும். (கட்டுரை அல்லது பேச்சுப் போட்டி). இப்போட்டியில் கலந்துக்கொள்ளும் மாணாக்கர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் போட்டி நடைபெறும் அன்று ஒப்படைக்கவேண்டும் மற்றும் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மாணாக்கர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அரசு / நிதியுதவிபெறும் நடுநிலை / உயர்நிலை /மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. போட்டியின் விதிமுறைகள்
2. படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு / நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகள் மற்றும்
மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.
நகல்–

1. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்
   (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

## தமிழ் வளர்ச்சித் துறை

## வேலூர் மாவட்டத்தில் "தமிழ்நாடு நாள் விழாவை" முன்னிட்டு 09.07.2024 அன்று நடத்தப்பெறவுள்ள மாவட்ட அளவிலான பள்ளி மாணாக்கர்களுக்கான போட்டிகள்

### பங்கேற்பு படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவரின் பெயர் (தமிழில்) | – | |
| 2. | தந்தையின் பெயர் | – | |
| 3. | பிறந்த நாள் / வயது | – | |
| 4. | பயிலும் பள்ளி / முகவரி (தொலைபேசி எண்ணுடன்) | – | |
| 5. | பயிலும் வகுப்பு | – | |
| 6. | இல்ல முகவரி (தொலைபேசி எண்ணுடன) | – | |
| 7. | மாணவரின் மாதிரி ஒப்பம் (தமிழில்) | – | 1.<br>2. |

**பரிந்துரை**

இப்பள்ளியில் பயிலும் செல்வன் / செல்வி ................................................................

தமிழ் வளர்ச்சித் துறையால் மாவட்ட அளவில் நடத்தப்பெறவுள்ள கட்டுரை / பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்படுகிறார்.

முத்திரை

தலைமையாசிரியர் ஒப்பம்

நாள் –

போட்டி நடைபெறம் நாளன்று மாணவரின் ஒப்பம் –

தமிழ் வளர்ச்சித் துறை – வேலூர் மாவட்டம்

தமிழ்நாடு நாள் – பள்ளி மாணாக்கர்களுக்கான மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள்

..........விதிமுறைகள்........

| | |
|---|---|
| 1. | போட்டிகள் 09.07.2024 செவ்வாய்க் கிழமையன்று "வேலூர், அரசு முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி வளாகக் கூட்ட அரங்கில்" நடத்தப்பெறவுள்ளன. வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணாக்கர்கள் மாவட்ட அளவிலான இப்போட்டிகளில் பங்கேற்க முடியும். போட்டிகளில் பங்கேற்கும் மாணாக்கர்கள் உரிய படிவத்தினை பூர்த்தி செய்து அந்தந்த தலைமையாசிரியரின் பரிந்துரையின் அடிப்படையில் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். போட்டியன்று மாணாக்கர்கள் பிற்பகல் 1.30 மணிக்கு போட்டிகள் நடைபெறும் இடத்திற்கு வருகைபுரிந்து தங்கள் வருகையை பதிவு செய்திடல் வேண்டும். உரிய நேரத்திற்கு வருகைதராத மாணாக்கர்கள் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்பெறமாட்டார்கள். நடுவர்களின் முடிவே இறுதியானது. போட்டிகள் நடத்தப்பெற்ற அன்றே முடிவுகள் அறிவிக்கப்பெறும் |
| 2. | போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து மாணாக்கர்களுக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும். பயணப்படி ஏதும் வழங்கப்பெற மாட்டாது |
| 3. | கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளுக்கான தலைப்புகள்<br><br>கட்டுரை ---- ஆட்சிமொழித் தமிழ்<br>பேச்சு ---- 1) குமரி தந்தை மார்சல் நேசமணி, 2) தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா, 3) முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி |
| 4. | கட்டுரைப்போட்டி பிற்பகல் 2.00 மணி தொடங்கி நடத்தப்பெறும். கட்டுரைப்போட்டியில் பங்கேற்கும் மாணாக்கர்களுக்கு வெள்ளைத்தாள் வழங்கப்பெறும். எழுதுகோல் உள்ளிட்ட எழுதுபொருள்கள், தேர்வு அட்டை ஆகியவற்றை மாணாக்கர்களே கொண்டுவர வேண்டும். |
| 5. | பேச்சுப்போட்டி பிற்பகல் 2.30 மணி தொடங்கி நடத்தப்பெறும். |
| 6. | கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெறும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ.10000, இரண்டாவது பரிசாக ரூ.7000, மூன்றாவது பரிசாக ரூ.5000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பெறும் |
| 7. | மேலும் விவரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்<br>தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்<br>தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர்<br>தொ.பே.எண் . 0416-2256166<br>மின்னஞ்சல் : tamilvalarchivlr17@gmail.com |